*புதுச்சேரி அரசு*
*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **06 செப்டம்பர், 2021**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி மாநில 15-வது சட்டப்பேரவையின் முதல் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று முடிந்ததை ஒட்டி, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் இன்று(06-09-2021) தேனீர் விருந்து அளித்தார்.

துணைநிலை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு R. செல்வம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயலர் திரு. அஸ்வனி குமார், காவல் துறை இயக்குனர் திரு ரன்வீர்சிங் கிருஷ்ணா, கூடுதல் காவல் துறை இயக்குனர் திரு ஆனந்த மோகன், அரசு செயலர்கள் விருந்தில் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் மத்தியில் பேசிய துணைநிலை ஆளுநர்,

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தனது முதல் பட்ஜெட் கூட்டத் தொடரை நிறைவு செய்திருக்கிறது. அதில் மக்களுக்கு பயன்படும் பல நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறது.
- மாநிலத்தின் துணைநிலை ஆளுநர் என்ற வகையிலும் புதுச்சேரி மக்கள் மீது அக்கறை கொண்ட ஒருவர் என்ற வகையிலும் மக்களுக்குப் பயன்தரும் வகையில் அமையும் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்த உறுதுணையாக இருப்பேன்

என்று தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் பேசுகையில்,

- புதுச்சேரியின் மீது அக்கறை கொண்ட துணைநிலை ஆளுநர் இருக்கும் வரையில் புதுச்சேரி நல்ல முன்னேற்றம் அடையும்.
- புதுச்சேரியை பசுமையான மாநிலமாக மாற்ற வேண்டும் என்று நினைத்து 75,000 மரக்கன்றுகளை நடவேண்டும் என்று வலியுறுத்தினார். புதுச்சேரியின் மீது அவருக்கு இருக்கம் அக்கறையை இது வெளிப்படுத்துகிறது. அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பல நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறது. மக்களின் நன்மைக்காக அனைத்து திட்டங்களும் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படும்.

என்று தெரிவித்தார்.